**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**R.W.1**

**MCOP No.  114/2022**

**Name** : மொய்னுதீன்
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** : உதவியாளர், ஆர்டிஓ அலுவலகம், திண்டிவனம்
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 22.01.2026.**

**எ.ம.சா.1 முதல் விசாரணை:-**

1) நான் இம்மனுவின் மூன்றாம் தரப்பினர் ஆவேன். ஆர்.டி.ஓ. திண்டிவனம் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் பெற்றுள்ளேன். அது எ.மா.சா.ஆ.2. நான் அந்த அலுவலகத்தில் உதவியாளராக பணி செய்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். படிவம் 24, மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் வாகன உறுதி சான்று (Fitness Certificate) விவரங்கள் கொண்டுவந்துள்ளேன்.

2) 20.02.2022ம் தேதி நடந்த விபத்திற்கான வாகனத்திற்கு எங்களது அலுவலகத்தால் வழங்கப்பட்ட ஆய்வறிக்கை செய்து வழங்கப்பட்ட மோட்டார்வ வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து சமயம் நான் கொடுத்திருக்கும் எ.ம.சா.ஆ.3 ன்படி கொடுத்துள்ள ஆம்னி கார் TN 77 L 4696 2ம் எதிர்மனுதாரரின் சொந்த உபயோகத்திற்கான வாகனம் என்றால் சரிதான். (Private Vehicle).

3) மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் மாருதி ஆம்னி என்றால் சரிதான். மனுதாரர் சொல்லியதன்பேரில் மேற்படி வாகனத்தை வாடகைக்கு டி போர்டாக எடுத்து

சென்றது மோட்டார் வாகன சட்டப்படி தவறு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள படிவம் 24 ல் ஆம்னி கார் TN 77 L 4696 வாகனம் non transport vehicle என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆம்னி வாகனம் விபத்து சமயத்தில் 2 ம் எதிர்மனுதாரர் சீனிவாசன் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

4) மேற்படி ஆம்னி வாகனத்தை வாடகைக்கு ஓட்டவில்லை என்றும் பாலிசி விதிமுறைகளை மீறவில்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.01.22 17:47:47 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**